# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் "A" தரச் சான்றிதழ் இரண்டாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் க. துரையரசன்**

எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.

தேர்வு நெறியாளர்

அலுவலகம் : 0431 - 2407016, 2407060

தொலைப்படி : 0431 - 2407444

மின்னஞ்சல் : coe@bdu.ac.in

வலைத்தளம் : www.bdu.ac.in


ந.க.எண்./தே.நெ./ம.பி-2/த.க./தேர்வுகள்/ஏப்ரல் 2019

நாள்: 19.02.2019

பெறுநர்

முதல்வர்கள்,
அனைத்துக் கல்லூரிகள் மற்றும்
பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்,

வருகின்ற ஏப்ரல் 2019 பருவத்தேர்வுகளுக்குத் தங்கள் கல்லூரி/மையத்திற்குத் தலைமைக் கண்காணிப்பாளராகத் தாங்களே பொறுப்பேற்று பல்கலைக்கழகத் தேர்வுகளைச் செம்மையாக நடத்தித்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தவிர்க்க இயலாத காரணங்களால் தாங்கள் பொறுப்பேற்க இயலாத சூழலில் தங்கள் கல்லூரி/மையத்தைச்சார்ந்த மூத்த பேராசிரியர்/குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் பணி நிறைவுற்ற நிரந்தரப் பேராசிரியர் ஒருவரை மட்டும் ஏப்ரல் 2019 பருவத்தேர்வுகளுக்குத் தலைமைக்கண்காணிப்பாளராக நியமிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தங்கள் அல்லது தங்களால் தலைமைக்கண்காணிப்பாளராக நியமிக்கப் பெறுபவரின் மகன்/மகள்/உறவினர் எவரேனும் எதிர்வரும் ஏப்ரல் 2019 பருவத்தேர்வை அந்தக்கல்லூரியில் எழுதுவார்களேயானால் வேறொரு மூத்தப் பேராசிரியரைத் தலைமைக்கண்காணிப்பாளராக நியமித்தல் நலமெனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தலைமைக்கண்காணிப்பாளர் நியமனப் படிவத்தினைப் பூர்த்தி செய்து 04.03.2019-க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட கடைசி தேதிக்குப்பின் அனுப்பப்படும் படிவம் ஏற்க இயலாது எனவும் அதனால் தேர்விற்கான முன் பணம் பெறுவதற்கும் ஏற்புடையதாகாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. **தலைமைக்கண்காணிப்பாளர் நியமனப் படிவம் பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்** என கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தாங்கள் ஒவ்வொருவரும் தங்களது மேலான ஒத்துழைப்பை நல்கி கடந்த காலங்களில் பல்கலைக்கழகத் தேர்வுகளைச் சிறப்பாக நடத்தியதைப்போல் இந்த ஏப்ரல் 2019 பருவத் தேர்வுகளையும் சிறப்புடன் நடத்தி முடித்திட தங்களது மேலான ஒத்துழைப்பை வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

தங்கள் உண்மையுள்ள,

19/2/19

தேர்வு நெறியாளர்